**ஆணைமடுவ பிரதேச சபை - 2023**

-------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆணைமடுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான ஆணைமடுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு (பொருத்தமானவாறு) இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பபை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 திசெம்பர் 09 இல் ரூபா 6,300,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கப் வாகனம் 2022 மே 09 இல் இடம்பெற்ற விபத்தில் முழுமையாக சேதமடைந் திருந்ததுடன் அந்த கப் வாகனத்தின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2024 இறுதி கணக்கு தயாரிக்கும் பொது இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 650,000 இல் இருந்த உழவு இயந்திரத்தின் பெறுமதி ரூபா 6,500,000 ஆக அதிகரித்து காட்டப்பட்டிருந்ததுடன் மோட்டார் வாகன கணக்கிலிருந்து ரூபா 620,000 பெறுமதி விடுபட்ட போதிலும், சொல்லப்பட்ட கணக்கு 5,230,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 இறுதி கணக்கு தயாரிக்கும் பொது நாட்குறிப்பு பதிவு ஊடாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | திருத்தங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் ரூபா 158,010 பெறுமதியான கடைசி இருப்புக் கலவை கொண்டிருக்கின்ற ரூபா 619,110 தொகையான மூலதன வெளியீடு மற்றும் ரூபா 461,100 பெறுமதியான இருப்பு என்பன வருமான பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 இறுதி கணக்கு தயாரிக்கும் பொது இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

-

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் கடைசி நாளில் 100 சீமெந்து பைகளின் கொள்வனவு தொடர்பில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 190,000 ஆன தொகை நிதிக்கூற்றுக்களில் கட்டப்பட்டிருக்கவில்லை. | சகல செலுத்த வேண்டிய கணக்குகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோரை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பெத்துக்குளம் குள வீதியை இணைக்கின்ற இடலிற்காக மிகுதியாக இருக்கின்ற பகுதிகளின் விருத்தி தொடர்பில் கைத்தொழிலின் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 384,554 அக இருந்த போதிலும் ரூபா 210,446 ஆன தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 இறுதி கணக்கு தயாரிக்கும் பொது இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான நடைமுறையை பின்பற்றவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | சொத்துக்களின் கீழ் ரூபா 136,250 பெறுமதியான பொருட்கள் கணக்கீடு செய்யப்படாமையால் சொத்துக்கள் அதே பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 இறுதி கணக்கு தயாரிக்கும் பொது இறுதி இருப்புக்களில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (எ) | மூலதன வெளியீட்டிற்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதி மற்றும் நிலையான சொத்தக்களின் மீதி என்பன சமமாக இருக்க வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த கணக்குகளிற்கு இடையில் ரூபா 3,587,438 ஆன வித்தியாசம் இருந்தது. | 2024 இறுதி கணக்கு தயாரிக்கும் பொது இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளிற்கு இடையிலான வித்தியாசங்களை இனங்காண்பதற்கும் அதகை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையால் ரூபா 136,649,669 மொத்தமான 03 ரயர்களின் கணக்குகளின் பரிசொதனை திருப்தியடைவது சாத்தியமாக இருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் கணக்குகள் தயாரிக்கும் பொது அதற்கான பட்டியல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமையாண்மை வழங்குகின்றவற்றின் எழுத்து மூல சான்று இயலளவு மற்றும் சொத்துக்களின் பெறுமதி கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாக சோசலீச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நி.பி.104(4) மற்றும் 105(1) | சபைக்கு சொந்தமான கப் வாகனங்கள் 2021 ஒக்தோபர் 18 இல் முச்சக்கர வணடடியுடன் மோதியமையால் சேதமடைந்திருந்ததுடன் உள்ளூராட்சி திணைக்களத்தின் பணிப்பில் விசாரணை மேற்கொள்ள்ப்பட்டதென குறிப்பிடப்பட்ட போதிலும் ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டதை தொடர்ந்து நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை மேலும், சபைக்கு சொந்தமான பக்கோக் இயந்திரம் 2021 யூலை 19 இல் விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | விசாரணை அறிக்கை எங்களால் பெறப் பட்டிருக்காததுடன் இது பெறப்படின் சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நி.பி 371(2) (ஆ) மற்றும் நி.பி 371(5) | கட்டு நிதியானது பெறப்பட்ட வேலை பூர்த்தியான பினனர் 10 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 168,991 தொகையான 07 முற்பணங்களின் தீர்ப்பனவில் கருத்திற் கொள்ளக்கூடிய தாமதங்கள் இருந்தது. | எதிர்காலத்தில் பட்டியலிடப்பட்ட திகதியில் முற்பண தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iii) நி.பி. 571(2) | 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 1,098,046 பெறமதியான 69 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஆ) சமுதாய அடிப்படை அமைப்பகளை தாபித்து நெறிப் படுத்துவதற்கான (நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) | சமுதாய அடிப்படை அமைப்புகளின் பதிவு மற்றும் மேற்பார்வையின் பொறுப்பு அப்பகுதியில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு | சமுதாய அடிப்படை அமைப்புகளின் பதிவு மற்றும் நடவடிக்கைகளின் மேற்பார்வை முறையாக மேற் | பட்டயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2013 இன் 01 ஆம் இலக்க பட்டயம். | வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையானது வட மேல் மாகாண நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதார பிரிவில் 60 அமைப்புக்களின் பதிவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொள்ளப்படுகின்றன. யின That |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,202,297 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 2,208,534 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 5,037 | 4,924 | 1,685 | 12,937 | 5,682 | 6,207 | 3,027 | 14,481 |
| வாடகை | 21,094 | 21,354 | 20,628 | 1,291 | 18,595 | 17,693 | 16,605 | 1,751 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,805 | 1,843 | 1,843 | - | 605 | 534 | 534 | - |
| ஏனைய வருமானம் | 81,210 | 6,409 | 6,409 | - | 10,211 | 22,063 | 22,063 | - |
| மொத்தம் | 109,146 | 34,530 | 30,565 | 14,228 | 35,093 | 46,497 | 42,229 | 16,232 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,514,444 ஆன நிலுவயையாக இருக்கின்ற வீத வரி மற்றும் ரூபா 1,291,427 ஆன | நிலுவயையாக இருக்கின்ற தெகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவயையாக இருக்கின்ற வருமானத்தை பெறுவதற்கு உடனடியாக |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 5,217,108 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி என்பன பெறவேண்டி இருந்தது. அந்த தொகையில் ரூபா 5,218,108 ஆன நீதி மன்ற தண்டப் பணங்கள் 01 ஆண்டிற்கு குதைகுறைகாகவும் ரூபா 26,971,631 ஆன முத்திரைக் கட்டணங்கள் 1 ஆண்டிற்கு மேலாகவும் 03 ஆண்டுகளிற்கு குறைவாகவும் இருந்தது என அவதனிக்கப்பட்டது. | பெறவேண்டிய முழுத் தொகையும் அறவீடு செய்வதற்கு பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. | நிலுவயையாக இருக்கின்ற வருமானத்தை பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆணைமடு பஸ் தரிப்பிடத்தில் மேல் மாடியில் 02 ஆம் இலக்க அறையில் 02 அறைகளாக பிரிப்பதற்கு 2023 சனவரி 12 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் குறித்த அந்த தீர்மானம் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காரணத்தினால் ரூபா 480,000 தொகையான கூடிய கேள்வி தொகையை பெறுவதற்கு சபையால் இயலாதிருந்தது. | 2023 சனவரி 12 இல் எடுக்கப்பபட்ட தீர்மானத்தை அமுலாக்கல் தொடர்பான தேவையான நடவடிக்கைகள் தற்பொது மேற் கொள்ளப்படுகின்றன. | பொதுக் கூட்டத் தீர்மானம் அமுலாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்குகளின் மீதி ரூபா 47,142,541 ஆக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகளிற்கு மேலானவை ரூபா 5,418,021 ஆகும். | நிலுவையான இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,919,014 ஆக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகளிற்கு மேலானவை ரூபா 1,025,229 ஆகும். | சாத்திமானளவு விரைவாக நிலுவையான இருக்கின்ற தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.2 **பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **செயலாளரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | கிராமிய மற்றும் பாடசாலகள் விளையாட்டு உட்கட்டமைக்கு அமைச்சால் வழங்கப்பட்ட ரூபா 1,455,077 தொகையான ஏற்பாடுகளில் 2021 பாடசாலகள் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் சுருக்குலாம விளையாட்டு மைதானம் கட்டப்பட்டதுடன் 2023 ஒக்தோபர் 19 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் சுருக்குலாம விளையாட்டு மைதானம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும் புற்கள் வளர்ந்தும் இருந்தது. | உரிய விளையாட்டு குழுக்களுக்கு இந்த நிலையை எழுத்தில் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி கட்டப்பட்ட பௌதீக வளங்களில் இருந்து அதிகூடிய பயன் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 300,000 கிரயத்தில் கட்டப்பட்டிருந்த ஆணைமடு தலக்கொலவேவ கைப்பந்தாட்ட மைதானம் இதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்தது. | உரிய விளையாட்டு குழுக்களுக்கு இந்த நிலையை எழுத்தில் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி கட்டப்பட்ட பௌதீக வளங்களில் இருந்து அதிகூடிய பயன் பெறப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,133,304 செலவழித்து ஆணைமடு மஹாகும்புக்கன்டவல கிவுல்டியசேன் நீர் செயற்திட்டம் கட்டப்பட்டிருந்து. செயற்திட்டம் தொடங்கி 2023 ஒக்தோபர் 19 இல் ஏறத்தாழ 04 ஆண்டுகள் கடந்திருந்த பொதிலும் நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர் செயற்திட்டம் பூர்த்தியான பின்னர் உரிய வாடிக்கையாளருக்கு நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி கட்டப்பட்ட பௌதீக வளங்களில் இருந்து அதிகூடிய பயன் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (சமுதாய நீர் செயற்திட்டம்) ரூபா 4,196,835 ஆன தொகையில் ஆணைமடுவில் கம்மன்டலுவ கல்குளமம் செய்திட்டம் கட்டப்பட்டிருந்தது. 2023 ஒக்தோபர் 19 இல் செயற்திட்டம் தொடங்கியதிலிருந்து 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் மீதி வேலைகள் தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பரிசோதனையை தொடர்ந்து தொடங்கப்படும். | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி கட்டப்பட்ட பௌதீக வளங்களில் இருந்து அதிகூடிய பயன் பெறப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டு உண்டியன் குளம் நீர் சுத்திகரிப்பு பிரிவு தாபிப்பதற்காகவும் நீர் சுத்திகரிப்பு தொடர்பான நடவக்கைகள் | சுத்திகரிப்பு தொடர்பான சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சங்கங்களின் விழிப்புணர்வை | அரசாங்க நிதிகளை பயன்படுத்தி கட்டப்பட்ட பௌதீக வளங்களில் இருந்து |

| | | |
|---|---|---|
| மேற்கொள் வதற்காகவும் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்ட போதிலும் இந்த பிரிவு 2023 ஒக்தோபர் 19 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | அதிகூடிய பயன் பெறப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது அப்பகுதியில் அமைந்திருந்த வபைக்கு சொந்தமான விளையாட்டு மைதானங்கள், சமுதாய மண்டபங்கள், வாரந் சந்தைகள் 16 நூலகங்கள் என்பவற்றின் காணிகள் மற்றும் சபையால் பயன்படுத்தப்பட்ட, முகாமை செய்யப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்ட வாகனங்கள் என்பவற்றின் உரிமையாண்மையை கையேற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய ஆதனங்களின் சட்ட ரீதியான உரிமையாண்மையை கையேற்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2006 அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.9.1(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 ஐ விஞ்சிய பொருட்கள் மற்றும் சேவைகளிற்காக ஒப்பந்த உடன்படிக்கை முறையாக தயாரிக்கப்பட்ட கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் 2022 இல் ரூபா 5,216,700 ஆன தொகை செலவழித்த வாகன திருத்தங்கள் தொடர்பில் எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சகல வாகன திருத்தங்களையும் மேற் கொள்ளப்படுகின்ற போது ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். | கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பதவிகளில் வெற்றிடங்கள் நிலவியதுடன் இரண்டாம் நிலை பதவிகளில் 19 மிகைகளும் 15 வெற்றிடங்களும் ஆரம்ப நிலை பதவிகளில் 13 மிகைகளும் இருந்தது. | சபையால் இருக்கின்ற வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | சபைக்காக தேவைப்பட்ட ஊழியர்களை சரியான இனங்காணப்பட வேண்டியதுடன் அந்த எண்ணிக்கையின் அனுமதியை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பதவி நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் என்பன முறையே ரூபா 2,500 மற்றும் ரூபா 9,441 ஆக இருந்ததுடன் இரண்டிற்குமான மொத்த தொகை ரூபா 11,941 2012 இலிருந்து அறவிடப்படாமல் இருந்தது. | நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் காட்டப்பட்ட 08 செயற்படுகளின் செயலாற்றலிற்காக ரூபா 466,627 ஆன தொகை ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்பட்டிருக்கவில்லை. | பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் அடைவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் உரிய நிகழ்ச்சிதிட்டங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்பாரத்த மட்டத்தை அடையப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு கைத்தொழில் பரிசோதனை, நூலக பரிசோதனை மற்றும் வீதி விளக்குகள் பொருத்துதல் மற்றும் நிலையான சொத்தக்களின் ஆவணமயப்படுத்தல் போற்ன பகுதியலில் அதன் கவனத்தை செலுத்தியிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவு முன்னை ஆண்டுகளில் மேவப்பட்ட பகுதியைவிட அதிகமான பகுதிகளை மேவுகின்றன. | விரிவான உள்ளக கணக்காய்வை நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளையும் மேவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.3. பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 11 செலவின விடயங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 350,000 தொகையான ஏற்பாடுகள் உள்ளபடியாக மற்றும் நெகிச்சியற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் அடைவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீட்டு இலக்குகளை அடையக்கூடிய வழியில் செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | 11 செலவின விடயங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 2,104,452 தொகையான ஏற்பாடுகள் உள்ளபடியாக மற்றும் நெகிச்சியற்று தயாரிக்கப் பட்டிருக்காமையால் மதிப்பீடுகளில் 50 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | பாதீட்டு இலக்குகளை அடையக்கூடிய வழியில் செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும். |

## 4.4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| சபையானது 2023 ஆம் ஆண்டின் பொது இனங்காணப்பட்ட 10 அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு 41 நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட போதிலும் அந்த இனங்காணப்பட்ட இலக்குகளில 39 நடவடிக்கைகள் அடையத் தவறியிருந்ததுடன் இது 21 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | 2024 இல் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை அடைவதற்கு உகந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |